# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 05 (19-05-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:147


# யாழ். மேயர் சரோஜினியின் பூதவுடல் இன்று கொழும்புக்கு!

## நாளை கனத்தையில் இறுதிக் கிரியைகள்

யாழ்ப்பாணம், மே 19

நேற்று முன்தினம் முற்பகலில் யாழ். நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் பூதவுடல் இன்று பிற்பகல் விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

நாளை கனத்தையில் இறுதிக்கிரியைகள் நடைபெறும் எனத் தெரியவந்தது.

திருமதி சஜோஜினிதேவியின் பூதவுடல் நேற்று நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் கொடியால் போர்க்கப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தன்கேணியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், மே 19

சித்தன்கேணிக்கும் பண்டத்தரிப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக் கிரனேட் வீசப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் சிறு காயமடைந்ததாகப் பலாலி படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் நடத்தியபதில் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-உ)

## கூட்டணி குழுவினர் வருகை

யாழ்ப்பாணம், மே. 19

யாழ்.மேயரின் மறைவைத் தொடர்ந்து எழுந்துள்ள நிலைமைகளை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வி. ஆனந்த சங்கரி தலைமையிலான கட்சிப் பிரதிநிதி குழு ஒன்று நேற்று நண்பகல் யாழ். வந்து சேர்ந்தது.

கூட்டணிக் குழுவினர் உடனடியாக நல்லூரில் உள்ள திருமதி யோகேஸ்வரனின் இல்லத்துக்குச் சென்று அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

திருமதி யோகேஸ்வரனின் இறுதிக் கிரியைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு கூட்டணிக் குழுவினர் முயன்றதாகவும் —

ஆனால் திருமதி யோகேஸ்வரனின் சகோதரியும் ஏனைய உறவினர்களும் கொழும்பிலேயே இறுதிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடைகளை மூடுமாறு கேட்கிறது வணிகர் கழகம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். மேயரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் யாழ். நகரக் கடைகளை மூடும்படியும் —

கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடும்படியும் —

யாழ். வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரியுள்ளது.

யாழ். மேயரின் மறைவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மேயர் கொலைக்கு புலிகள் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 19

யாழ். நகர மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் மறைவுக்கு புலிகள் மீதே அரசாங்கமும் படை வட்டாரங்களும் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

படை வட்டாரங்களின் சார்பில் வட பகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல நேற்று பலாலியிலிருந்து விடுத்த செய்திக் குறிப்பில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுமக்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஆழ்ந்த கவலை தெரிவித்து இரண்டு வாரங்கள் கூட முடியாத நிலையில், விடுதலைப் புலிகள் மீண்டும் பொதுமக்களை தமது படுகொலைகளுக்கு இலக்காக்கி இருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணுவிடம் விடுதலைப் புலிகள் தனது போர்த் தந்திரோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காலம் பிந்தி வந்துசேர்ந்த சரோஜினியின் வாகனம்!

யாழ்ப்பாணம், மே 19

சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். மேயர் சரோஜினிதேவி யோகேஸ்வரன் கொழும்பில் பாவித்த சொந்த வாகனம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட போதிலும், அவர் இறந்த பின்னரே அது யாழ். வந்து சேர்ந்தது.

இந்த 'ஹையஸ்' வாகனம் கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வரப்பட்டு நேற்று முன்தினமே பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது. ஆனால் அது யாழ்ப்பாணம் வந்து சேர்வதற்கு முன்னர் அவர் இறந்து விட்டார்.

நேற்று அந்த வாகனம் திருமதி யோகேஸ்வரனின் நல்லூர் இல்லத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்தது.

(உ-3-51)

## முருங்கனில் தாக்குதல் 2 படையினர் பலி!

வவுனியா, மே 19

மன்னார் மாவட்டம் முருங்கனில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக்காலை 6மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்தியதாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

வீதித்தடைகளை அகற்ற வந்த படையினர் மீதே விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின் பின்னர் விடுதலைப்புலிகள் நான்கு துப்பாக்கிகளையும் மோட்டார்றோலா வானொலித்தொடர்புச் சாதனம் ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளதாக வவுனியாவிலுள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றி தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-164-9)

## ஜி. சீ. ஈ. பரீட்சை முடிவு சனியன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், மே 19

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் வெளியிடப்பட உள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் விமான மூலம் அனுப்பிவைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகளைப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு நகரப் பாடசாலை மாணவர்கள் நேற்று முதல் தங்கள் தங்கள் பாடசாலைகளில் தங்கள் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ)

## உடுவில், மானிப்பாய் பகுதிகளில் தேடுதல்

வலிகாமம் தெற்கு, மே 19

வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசங்களில் நேற்று அதிகாலைமுதல் பாதுகாப்பு படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

உடுவில், இணுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய், சுன்னாகம் பகுதிகளிலேயேதேடுதல் நடத்தப்பட்டது.

நண்பகல் வரை தேடுதல் நீடித்தது. எனினும் அரச ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் தத்தம் கடமைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வீடுகளில் இருந்த மக்கள் உடுவில் ஆலடி கமத்தொழில் நிலைய மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

நேற்றைய சுற்றிவளைப்புத் தேடுதலை அடுத்து மருதனார்மடம் சந்தையில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. (ஐ-86-152)

## மணலாறில் பலியான யுவதியின் சடலம் மீட்பு!

வவுனியா, மே 19

மணலாறுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் படையினரால் கொல்லப்பட்டார்.

அவரிடம் இருந்து கைப்பற்றிய குறிப்புப் புத்தகங்களில் இருந்து அவர் கனகா என்ற விடுதலைப் புலி உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி பெண்ணின் சடலத்தை நேற்று வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் சிவநாதன் கிசோரிடம் வெலி ஓயா படைத் தளபதி மேஜர் கே. டி. எஸ். வீரசிங்க ஒப்படைத்தார்.

தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இச்சடலம் இன்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிக்கப்பட்டது.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குமாரவேலு அழகரெத்தினம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும், தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு அழகரெத்தினம் 8 - 5 - 98 வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் சுகிர்தமணியின் அன்புக் கணவரும், அரவிந்தன், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் துஷ்யந்தன், விமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உஷா அரவிந்தனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10 - 5 - 98 ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. சோமசேகரம்
(மைத்துனர்)

கோந்திரப்பத்தை,
தும்பளை,
பருத்தித்துறை.

(சி/3772)

## கொட்டடி பொன்னுத்துரை சிறிபத்மநாதன்

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை சிறிபத்மநாதன் அவர்கள் 17 - 5 - 98 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் சிறி பத்மநாதா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின அன்பு மகனும், காலஞ்சென்ற புஷ்பராணியின் அன்புக் கணவரும் கமலவதனி, கேமமாலினி (லண்டன்), ராஜ்குமார், முகுந்தன் (அமெரிக்கா), ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. செந்திவேலனின் (லண்டன்)மாமனாரும் Dr. சிறிரங்கநாதன் (தென் ஆபிரிக்கா), சிறி ரங்கேஸ்வரி (ஆஸ்திரேலியா), சிறி ராஜேஸ்வரி(ஆஸ்திரேலியா), சிறிஸ்கந்தராஜா (அமெரிக்கா), சிறிநிவாசன் (அமெரிக்கா), சிறி ஈஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரரும், Dr. பாரதி (ஆஸ்திரேலியா), கந்தசாமி (ஆஸ்திரேலியா), விஜயகுமார் (கனடா), அருந்ததி சிறிரங்கநாதன் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), அனா (அமெரிக்கா), ரேனுகா ஆகியோரின் மைத்துனரும் செல்வரத்தினம் (கனடா) அவர்களின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
M. செல்வரட்ணம்
(மைத்துனர்.)

இல. 5, முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(56106)

## துரைச்சாமி சிவகுமாரன்

698/5, சபாபதி வீதி, தலையாழி வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைச்சாமி சிவகுமாரன் 15-5-98 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் துரைச்சாமி சறோஜினிதேவி அவர்களின் அன்பு மகனும், நாகலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவா, சிவானந்தன் (மெல்போன் சர்வகலாசாலை), மாதினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், பாலச்சந்திரா(ஆஸ்திரேலியா), கௌசுகி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தட்சாயினி, தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-5-1998 புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
துரைச்சாமி சறோஜினிதேவி

(56096)

## மயிலன் அண்ணாச்சாமி

(முன்னாள் இ. போ. ச. நடத்துனர்-யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், புத்தூர் மணற்பகுதியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது வன்னியில் உடையார் கட்டில் வசித்துவந்தவருமாகிய மயிலன் அண்ணாச்சாமி 14-05-98 அன்று உடையார் கட்டில் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற மயிலன் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், புத்தூர் மணற்பகுதியைச் சேர்ந்த இராசகிளியின் அன்புக் கணவரும், யசோதா (ஆசிரியை யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) யசோதரன், யசோக்குமார், ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுரு, சுப்பையா (இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி), கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லக்கிளி (டென்மார்க்), கந்தசாமி (டென்மார்க்), தங்கக்கிளி, நிர்மலா, திருநாமம், சின்னக்கிளி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் உடையார் கட்டில் நிறைவடைந்தன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
திரு. ம. சுப்பையா (சகோதரன்)
(இலங்கை மின்சாரசபை-சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு,
சாவசச்சேரி.

(56098)

# உயர்தரப் பரீட்சை ஒகஸ்டில் நடக்கும்

யாழ்ப்பாணம், மே 19

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை வழமைபோல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்துவது எனப் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஒகஸ்ட் 13ஆம் திகதிமுதல் இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐந்து மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் ஒகஸ்டில் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு தேர்தல் நடைபெறுமிடத்து பரீட்சை திகதிகளில் மாற்றம் செய்யப்படலாம் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அரசின் முடிவை அறிந்துகொள்ள பரீட்சைத் திணைக்களம் எதிர்பார்த்திருப்பதாகவும்—

இக் காலப்பகுதியில் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்கூட்டியோ அல்லது பின்னராகவோ பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஓட்டோ தடம் புரண்டு 2 பேர் காயம்

யாழ்ப்பாணம், மே 19

ஆலய தரிசனத்துக்கு ஓட்டோவில் சென்று திரும்பிய வேளை ஓட்டோ தடம் புரண்டதில் இருவர் காயமடைந்தனர்.

நல்லூர் கைலாயபிள்ளையார் கோயிலடியில் நேற்று முன்தினம் மாலை நடந்த இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் விஜயலட்சுமி (வயது 36) அவர் மகன் வைத்திலிங்கம் கபிலன் (வயது 9) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

## மழையால் குளங்கள் நிரம்பின

செம்பியன்பற்று, மே 19

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இம் முறை பெய்த மழையால் குளங்கள், துரவுகள், தொடுவாய்கள் என்பன நிரம்பின.

இதைவிட செம்பியன்பற்று கடற்கரை வீதியில் இருந்து பிரதான வீதிவரை தேங்கி நின்ற வெள்ளம் வாய்க்கால் வெட்டி கடலுக்குள் விடப்பட்டுள்ளது. (இ-36)

## பயிற்சி நெறி

சண்டிப்பாய், மே 19

மானிப்பாய் இந்துகல்லூரியில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் ஆங்கில தட்டச்சு, ஆங்கில சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் ஆரம்பமாகியுள்ளன.

நான்கு மாத காலம் நடைபெறும் இப்பயிற்சிநெறியில் 20 பேர் பயிற்சி பெற்று வருவதாக கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார். (இ-135)

## அ. அட்டை

யாழ். நகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டை விநியோகம் இன்று 19-05-98 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சின்னக்கடை இராணுவ முகாமில் இடம் பெறும். (இ


## சிந்து திரையரங்கு

உரும்பிராய்

தனது இரண்டாவது வருடத்தில் காலடி வைக்கும் வேளையில் இன்றைய காட்சிகளை இலவசமாக வழங்குகின்றான்.

ரசிகர்களே திரண்டுவாரீர்!

காலை 10-30 மணி
TITANIC
மாலை 3-30 மணி
பதவிப்பிரமாணம்
நாளை முதல்
10-30, 3-30 காட்சியாக
அரிச்சந்திரா
(CD வெளியீடு)

(56108)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
கார்த்திக், சௌந்தரியா
நடித்த
பொன்னுமணி
புதன்கிழமை தொடக்கம்
கார்த்திக், மீனா
நடித்த
அரிச்சந்திரா
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
பழைய நேரம்
தொலை பேசி இல;
070 - 212223

(55969)

## நாகம்ஸ்

சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்
19- 05- 98 செவ்வாய்
பிரபு, சுவலட்சுமி,
கௌதமி நடித்த
இனியவளே
(புதிய வெளியீடு)
காட்சி 10-30 - 2-30

(56100)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## ஐயாத்துரை சின்னம்மா

சங்கானை பழைய தபாற் கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை சின்னம்மா 18 — 05 — 1998 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் செல்வராசா (ஜேர்மனி), (முன்னாள் தலைவர், தெ. ப. பொ. உ. கூ. சங்கம், சங்கானை) இராசகுலசிங்கம், லோகராசா (ஜேர்மனி), கந்தசாமி (ஜேர்மனி), சரஸ்வதி, இரத்தினபாக்கியம், புஸ்பராணி, இராசாத்தி, இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, மார்க்கண்டு, மகாலிங்கம், சின்னத்தம்பி, கணேசலிங்கம், லோகேஸ்வரி, செல்வராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி, தவராணி (ஜேர்மனி), யோகராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கணேசநேசன், கமலவரதன் (டோகா), விக்கினேஸ்வரன், றஞ்சினி, சர்மிளா, சசிகலா, சசிகரன், தர்சினி, நளினி, நேசராணி, குமாரராசா, ஜெயசிங்கம் (ஜேர்மனி), வெவிமலர், றமேஸ்வரன் (டோகா), சதீஸ்வரன், தயேந்தினி, ஜீவசுரேஸ் (டோகா), ஜீவினி, ஜீவசுகிந்தன், றகிதா, கவிதா, விசிதா, ஜந்தினி, சுதாஸ்கரன் (மாணவன் A/L 97 மானிப்பாய் இந்துக் கல்லூரி), சுகிதா, சுதர்சினி, அனுசுயா, கயன், தயன், ரெறன்ஸ், அனுசன், அனுசா, தினேஸ், டர்சன், சஞ்சீவன், லெசீபன், லெனின், மகாலிங்கம், இராசேநதிரம், லாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எசி, தன்சன், நீசாந்தன், நிக்சனா, நிலைக்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19- 05- 98 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12. 30 மணியளவில் அவரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சுதாஸ்கரன், சதீஸ்வரன்
(பேரன்)

பழைய தபாற் கந்தோர் வீதி,
சங்கானை.

(56104)

## சின்னத்துரை பத்மநாதன்

இல: 40, சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை பத்மநாதன் காலமானார்.

இவர் சின்னத்துரை நவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பத்மாதேவி, இந்திராதேவி, யோகநாதன் (இத்தாலி), சிவரஞ்சினி, மனோகரநாதன் (இத்தாலி), சுகிர்தாதேவி, நிர்மலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (தீயணைப்புப்படை), ஜெகேந்திரன் (கொழும்பு), தேவதாஸ் (கனடா), பொன். தர்மேந்திரன் (யா/கல்வித் திணைக்களம்), ஞானசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சைலஜா, சாமினி, தனுஜா, சுலக்ஷன், பிரதீப், பிரவீண் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-05-1998 இல் சென்னையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன். தர்மேந்திரன்

10, செல்லர் லேன்,
செம்மணி வீதி,
நல்லூர்.

(56108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை விஸ்தரிப்பு

# உடனடியாக இல்லை!

## பாரதீய ஜனதா தலைவர் தெரிவிப்பு

புதுடில்லி, மே 19

இந்திய நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக மத்திய அமைச்சரவையை விரிவுபடுத்தும் திட்டத்தை பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கைவிட்டு விட்டதாக பி.ஜே.பி தலைவர் குஷாபாவு தாக்கரே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாக்பூரில் செய்தியாளர்களிடம் இதனைஅவர் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் பி.ஜே.பி. தலைவர்கள் எவரும் கட்சியின் தேசிய செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவை விஸ்தரிப்பின் போது அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து மேலும் சிலர் அமைச்சர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. (இ-6)

# தலிபான் யுத்த விமானங்கள் சந்தைப் பகுதியில் குண்டுவீச்சு

## 31 பேர் பலியாகினர்

காபூல்,மே 19

ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் அமைந்துள்ள தாலுகான் நகரத்தில் மக்கள் நெருக்கடி மிகுந்த சந்தைப் பகுதி ஒன்றில் தலிபான் போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 31 பேர் இறந்து விட்டனர்; 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் ரபானியின் வலுவான கோட்டையான தாக்கர் மாகாணத் தலை நகரத்தின் மீது தலிபான் படையினர் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தியதாக எதிர்த் தரப்புப் படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தாக்குதல்களை ஊர்ஜிதம் செய்த தலிபான் படையினர், எதிர்த்தரப்பாரின் இராணுவ நிலைகளே முக்கிய இலக்குகளாக இருந்தன என்று தெரிவித்தார். (இ-6)

# விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு லண்டனில் ஆர்ப்பாட்டம்

## சிங்களவர்கள் நடத்தினர்

விடுதலைப்புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை செய்ய வேண்டும் என்று கேட்டு பிரிட்டனில் உள்ள சிங்கள அமைப்புக்கள் நேற்று முன்தினம் லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஹைட்பார்க் பூங்காவின் பீற்றர்ஸ் கோணரில் இருந்து ரபகல்கார் சதுக்கத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்த அமைப்புக்களில் ஒன்றைச் சேர்ந்த ஒருவர் இது பற்றிக் கூறும் போது 'இந்த ஆர்ப்பாட்டம் சிங்கள அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எங்கள் நாட்டில் என்ன நடக்கின்றது என்பதையும் விடுதலைப்புலிகள் எங்கள் நாட்டுக்கு என்ன செய்கிறார்கள் என்பதையும் விளக்குவதற்காகவே இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்றார்.

விடுதலைப் புலிகளுக்கு இங்கே பெரும் ஆதரவு கிடைக்கின்றது. இங்கே விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை நிறுத்தும்படி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்குச் செல்ல சிங்கள அமைப்புக்கள் விரும்புகின்றன.

இது ஒருசிங்கள ஆர்ப்பாட்டம். இதில் வேறு எவரையும் கலந்து கொள்ளும்படி நாங்கள் கேட்கவில்லை என்றார். (இ-6)

# வாஜ்பாய் - கருணாநிதி

# கச்சதீவு குறித்துப் பேச்சு

சென்னை, மே 19

கச்சதீவை மீட்பதுகுறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் பேச்சு நடத்தியிருப்பதாக மீன்வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரன் தமிழ்நாடு சட்டப்பேரவையில் கூறினார்.

மீன்வளத்துறை மீதான விவாதம் அண்மையில் தமிழக சட்டப் பேரவையில் நடைபெற்ற போதே ஜெனிபர் சந்திரன் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழக மீனவர்கள் தங்கள் வலைகளை உலர வைக்க கச்சதீவைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆண்டுக்கொரு முறை அங்குள்ள அந்தோனியார் கோயிலில் விழா நடத்தியும் வந்தனர், ஆனால் இலங்கையில் சிங்களவர்களுக்கும்விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்ட பிறகு 1984 ஆம் ஆண்டிலிருந்து அத்தீவுக்குச் செல்ல தமிழகமீனவர்கள் அஞ்சுகின்றனர்.

கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்தும் அத்தீவை மீட்பது பற்றியும் பிரதமர் வாஜ்பாயுடன்முதல்வர் கருணாநிதி பேச்சுநடத்தினார் என்றார்.

விவாதத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜி. பழனிச்சாமி கச்சதீவை மீட்பது குறித்து மத்திய அரசை தமிழக அரசு அணுகவேண்டும் என்றார்.

மீன்பிடித் தொழிலில் 50 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். தமிழக மீனவர்கள் திசைமாறி இலங்கை எல்லைக்குள் சென்றுவிட்டால் அந்த இராணுவத்தால் துன்புறுத்தப்படுகின்றனர். சிலர் பிணமாகத் திரும்பிவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் ஞானசம்பந்தம் உரையாற்றுகையில், புயல் வீசும் காலத்தில் மீனவர்களின் படகுகளில் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்த வேண்டும். நமது மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றார். (இ-7)

# அணு வெடிப்புக்கள் மூலம் பல தகவல்கள் கிடைத்தன

## இந்திய விஞ்ஞானிகள் பெருமிதம்

புதுடில்லி, மே 19

இந்தியாநடத்திய தொடர்ச்சியான 5 அணு வெடிப்புப் பரிசோதனைகள் பல்வேறு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான முக்கிய தகவல்களைத் தந்துள்ளன என்று இந்தியாவின் உயர் நிலை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அணு வெடிப்புப் பரிசோதனைகளை நிகழ்த்திய இடத்தில் எடுக்கப்பட்ட தொலைக் காட்சிப் படங்களைக் காட்டி விளக்கமளித்த இந்தியாவின் அணு சக்தி ஆராய்ச்சித்திட்ட நிர்மான நிபுணர்கள் தாம் சாதித்தவை என்ன என்பதைத் தெளிவு படுத்தினார்கள்.

கடந்த வாரம் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்ட உபகரணங்களில் அணு வெடிப்பு ஆற்றலைப் பயன்படுத்தும் ஆயுதங்களும் அடங்கும் என்றும் — அத்தகைய ஆயுதங்களின் வெடிப்பாற்றல் 43 ஆயிரம் தொன் ரி. என். ரி. வெடிப் பொருள்களுக்குச் சமனாகும் என்றும் டாக்டர் சிதம்பரம் கூறினார்.

அணு சக்தி மூலமல்லாத பிளப்புக்கான உபகரணம் ஒன்றும் வெடிக்கச் செய்யப் பட்டதாகவும் அவர் கூறினார்.

ஒப்பீட்டளவில் சிறியனவான ஏனைய மூன்று உபகரணங்களும் அதாவது தந்திரோபாயமான அணு ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்களும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-6)

# இந்தியாவுடனானஉறவை அமெரிக்கா முறிக்காது

நியூயோர்க் மே 19

அணு வெடிப்புச் சோதனைகளை நடத்தியதனால் இந்தியாவுடனான ராஜீய உறவுகளை அமெரிக்கா முறித்துக் கொள்ளும் சாத்தியம் இல்லை.

இப்படி கிளின்ரன் நிர்வாகம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் கிளின்ரனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாண்டி பெர்சர் வாஷிங்டனில் அளித்த தொலைக்காட்சிப் பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கின்றது என்றும்—

இந்தியாவுடனான உறவுகளை அமெரிக்கா முறித்துக் கொள்ளமாட்டாது என்றும்— அவர் குறிப்பிட்டார். (இ-6)

## ரூ. 10 கோடி கலர் ரெலிவிஷன் ஊழல்:

# ஜெயலலிதா உட்பட 11 பேர் மீது குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் பதிவு

சென்னை, மே 19

கலர் ரெலிவிஷன் ஊழல் வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா முன்னாள் அமைச்சர் செல்வகணபதி உட்பட 11 பேர் மீதான குற்றச்சாட்டை. சிறப்பு நீதி மன்றம் பதிவு செய்தது.

இவ்வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக் கோரி ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை சிறப்பு நீதிபதி வி. ராதாகிருஷ்ணன் தள்ளுபடி செய்தார்.

அவர் தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது.

அரசுப் பணத்தை மோசடி செய்ய பதினொரு பேரும் சேர்ந்து எவ்வித அச்சமும் இன்றிச் சதிசெய்துள்ளனர்.

ஜெயலலிதா உட்பட 7 பேர் தங்கள் பதவியை இதற்காகத் தவறாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இதில் டி. எம். செல்வகணபதி தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

பஞ்சாயத்துக்களுக்காக 45 ஆயிரத்து 302 கலர் ரெலிவிஷன்கள் 1995–96ஆம் ஆண்டுகளில் வாங்கப்பட்டன.

அப்போது வெளிச் சந்தையில் ஒரு கலர் ரெலிவிஷன் விலை 12ஆயிரத்து 500 ரூபா ஆனால் 14 ஆயிரத்து 500 ரூபாவுக்கு உள்ளாட்சித் துறை சார்பில் இதனை வாங்கியுள்ளனர்.

வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையை விடக் கூடுதல் விலைக்கு கலர் ரெலிவிஷனை வாங்கக் கூடாது என்று நிதித்துறைச் செயலர் எதிர்ப்புதெரிவித்திருந்தார்.

ஆனால் அது பற்றி கவனிக்காமல் நிதித்துறை அமைச்சராக இருந்த நெடுஞ்செழியன் கோப்பில் கையெழுத்திட்டு இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்து மற்றவர்கள் பண லாபம் பெற வழி செய்துள்ளார்.

ரெலிவிஷன் விற்பனையாளர்களிடமிருந்து ரூபா 30 லட்சத்தை சசிகலாவின் உறவினர் எஸ். ஆர். பாஸ்கரன் வாங்கியுள்ளார். கூடுதல் விலைக்கு ரெலிவிஷன் வாங்கும் திட்டத்துக்கு ஜெயலலிதாவிடம் ஒப்புதல் பெற்றுத்தருமாறு சசிகலாவிடம்அவர் கூறியிருந்தார்.

அதன்படி சசிகலாவும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இதற்கு ஒப்புதல் வாங்கியுள்ளார்.

நீதி மன்றில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களைப் பார்க்கும் போது அவர் ரெலிவிஷனை வாங்கியதில் எப்படி முறை கேடுகள் நடந்துள்ளன என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

11 பேர் மீதும் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று கூற இயலாது,

எனவே அவர்களுக்கு எதிராக ஊழல் தடுப்புச் சட்டம் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் விசாரணை நடைபெறும். இப்படி தெரிவிக்கப்பட்டது. (இ-6-10)

# மகளிர் அபி. பணியகம் மாணவர்களுக்கு உதவி

நல்லூர், மே 19

கல்வியில் ஆர்வம் மிக்க, வசதிகுறைந்த மாணவர்களுக்கு ரூபா 400 மாதாந்த உதவியாக மகளிர் அபிவிருத்திப் பணியகம் வழங்குவதாகவும் —

பொருளாதார வசதி குறைந்த பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள பெண்கள் ஏதாவது தொழில் பயிற்சி பெற்றுறிந்தால் அவர்கள் சுயதொழில் செய்ய விரும்பும் பட்சத்தில் தங்களுடன் தொடர்பு கொண்டால் தொழில் செய்வதற்கான நிதியுதவிகள் வழங்கப்படும் எனவும் —

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

(இ-103)

# திருவடி நிலைமயானத்தை பயன்படுத்தக்கோரிமகஜர்

சுழிபுரம், மே 19

சுழிபுரம் பகுதியில் இறந்தவர்களின் பிரேதங்களை சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் தகனஞ் செய்யவும்—

அந்தியேட்டிக் கிரியைகளை நிறைவு செய்யவும்—

அனுமதிக்குமாறு சுழிபுரம் மக்கள் பொன்னாலை இராணுவப் பொறுப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம், பண்ணாகம், தொல்புரம், சாந்தை, பனிப்புலம், சங்கானை மேற்கு மக்கள் பிரேதங்களை திருவடி நிலை மயானத்தில் தகனஞ் செய்வதும், மதச் சடங்குகளை நிறைவு செய்வதும் தொன்று தொட்டு இருந்து வந்த வழமை ஆகும்.

இராணுவ நடவடிக்கை காரணமாக தற்போது இது தடைப்பட்டுள்ளது.

(இ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரஸ்கோ லூபிறிகேசன் சேவிஸ்

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி
கார், லொறி, சேவிஸ் செய்வதற்கு
ஆரம்பித்துள்ளோம்.

சேவிஸ் செய்வதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை (கிறிஸ்சர்) நேரில் வரவும்.

**பரஸ்கோ லூபிறிகேசன் சேவிஸ்**
**முத்திரைச்சந்தி,**
**நல்லூர்.**

(56092)


## JAFFNA REHABILITATION & RESETTLEMENT PROGRAMME

Mine Action Pilot Project Jaffna

## INFORMATION MEETING

The United Nations Office for Project Services is planning to commence the Mine Action Pilot Project in Jaffna within the next two months. The project is continuing to identify candidates to participate in this programme.

It is becoming evident that potential candidates have many questions concerning the process of minefield surveying including whether or not the work could be dangerous, how difficult the training will be and how difficult the work will be.

In order to answer any questions that potential candidates may have, a meeting has been arranged at Kachcheri Training Room on FRIDAY 22 MAY 1998 at 3. 00 p. m.

The meeting will Consist of the Following format:

An Introduction from the Mine Action Co-ordinator
An Introduction to the Mine Action Pilot Project Jaffna
An Overview of Minefield Survey Techniques
A Summary of the Minefield Survey Training Courses
Question & Answer session

Anybody who wishes to learn more about what is entailed in the process of minefield survey is welcome to attend, including those who may have already submitted resumes. Anybody attending this meeting will be under no obligation to take matters further if they have no wish to do so.

(56086)

## ஆத்ம சாந்தி அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 04 | 19 |
| — | — |
| 10 | 04 |
| — | — |
| 1911 | 1998 |

### அம்பலவாணர் சங்கரப்பிள்ளை

(கோப்பாய் வடக்கு)

மக்கள் சேவையே மகேசன் சேவையென சமூக சேவையுடன் இறை பணியில் தன்னை இணைத்து இறுதிநாள்வரை கோப்பாய் வாழ் மக்கள் நலனுக்காக அயராது உழைத்து அனைவரையும் அன்பால் கவர்ந்து பலானை கண்ணகை அம்மன் கோயிலில் எதுவித ஊதியமும் பெறாது காசாளராக தன் முதுமைநாள்வரை பதவி வகித்து ஒரு நல்ல தொண்டனாகவும், ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் மற்றும் பல சமூக சேவை நிறுவனங்களின் வளர்ச்சிக்காக நற்பணிகள் புரிந்து மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்று அமரத்துவம் அடைந்த அமரர் அ. சங்கரப்பிள்ளை அவர்களின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காக எமது ஆத்ம அஞ்சலியை காணிக்கையாக்கி இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் 31 ஆம் நாளாகிய 19 – 05 – 1998 செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணிக்கு கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயிலில் நிகழவுள்ள ஆத்ம சாந்தி விசேட பூசை வழிபாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கோப்பாய் வடக்கு பலானை கண்ணகை
அம்மன் கோயில், ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி
கோயில் பரிபாலனசபையினர் மற்றும்
சமூக சேவை நிறுவனங்கள்.

கோப்பாய் வடக்கு. (56090)

## வான்சேவை நீடிக்க கோரிக்கை

செம்பியன்பற்று, மே 19

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய திருநாளை முன்னிட்டு பருத்தித்துறையில் இருந்து நாகர்கோயில்வரை நடத்தப்பட்டு வரும் வான் சேவையை செம்பியன்பற்று வரை நீடிக்குமாறு மாமுனை செம்பியன்பற்று பகுதி இளைஞர்கழகங்கள், பொது அமைப்புக்கள் என்பன கோரிக்கை விடுத்துள்ளன, (இ–36)

## விவசாயிகள் அதிருப்தி

வலி. தென்மேற்கு, மே 19

நவாலி விவசாயிகள் சம்மேளனத்துக்கு உட்பட்ட தரவைகளில் இஞ்சி, அன்னாசி போன்ற பயிர்களைச் செய்கை பண்ணக்கூடிய வாய்ப்பு உள்ள போதிலும் நவாலி விவசாயிகளுக்கு அவை வழங்கப்படாதது குறித்து விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர், (இ–185)

## தரவுகளை சேகரித்துத் தர அறிவுறுத்து

வலி. தென்மேற்கு மே 19

உடுவில் கமநல கேந்திர நிலையங்களுக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்கள் கீழ்வரும் தரவுகளை உடன் சேகரித்து வழங்குமாறு பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் சம்மேளனங்களின் செயலாளர்களைக் கேட்டுள்ளார்.

★ தங்கள் பகுதிக்கு 1998 - 99 பெரும்போகத்துக்கு தேவையான ''விதை நெல்'' விவரம்

★ தங்கள் பகுதிக்கு 1998 – 99 பெரும் போகத்துக்கு தேவையான விதை கிழங்கின் அளவும், வர்க்கமும்,

★ தங்கள்பகுதியில் உள்ள 4சில்லு 2சில்லு உளவு இயந்திங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்களின் தொகை

★ விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை.

(இ - 18)

## CORRECTION

Notice of Death-
DALLAS FITCH

Please read the informant's name as JEDDIE FITCH in the above advertisement which appeared in Uthayanof 18-05-1998.


இம்மாதத்திற்கான மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களும், வாராந்த புலமைப் பரிசில் வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND - யாழ். நகர்,
(56079)



**BOSCO INSTITUTE**

25, நக்காறோட்,
பொருளியல்
A/L 2000
உற்பத்தி சாத்திய வளையி
திரு. விக்கி
ஆரம்பம்:
20 – 05 – 98
3.00மணி
(56095)


## தப்பிய படையினரில் 5 ஆயிரம் பேர் வெளிநாடுகளில்!

கொழும்பு, மே 19

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர் என இராணுவ நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா தெரிவித்தார்.

இதனால் தற்போது தொடர்ந்தும் தலைமறைவாக இருக்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கைது செய்யும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக, இவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் வசந்த பெரேரா தெரிவித்தார்.

தற்போது தலைமறைவாகியிருக்கும் படையினரின் விவரங்களும் கட்டுநாயக்க விமான நிலைய விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளதுடன் பயணிகளைக் கண்காணிக்கும் பணியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தம்பியோடிய படையினரைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள படையினர் தினமும் 50 –க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ–7)


தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



**அருண்**
**புளொக் தயாரிப்பாளர்**

அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாநகர மேயரும், தமிழர் விடுதலைக்
கூட்டணி உறுப்பினருமான


திருமதி
**சரோஜினி யோகேஸ்வரன்**

அவர்களது அகால மரணத்தையிட்டு எமது இதய அஞ்சலியை ஆழ்ந்த கவலையுடன் காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
காரியாலய ஊழியர்கள்,
வலி. வடக்கு பிரதேச சபை.

(56093)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 27 | 19 |
| — | — |
| 11 | 04 |
| — | — |
| 1965 | 1998 |

அமரர்
### வல்லிபுரம் ஜெயராசன்
(அப்பன்)

(உரிமையாளர் அப்பன் ரேணிங் வேக்ஸ், மல்லாகம்)

எங்கள் குடும்ப விளங்கே
பாசமுடன் எமைக்காத்த அன்புத் தெய்வமே!
புன்னகை பூத்த உன்முகத்தை இனி என்று நாம் காண்போம்?
மாதமொன்று ஆனதுவோ உனைப் பிரிந்து,
ஜென்மம் ஏழு ஆனாலும் உன் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது,
உன்னை அழைத்த ஆண்டவன் பாதத்தில்
ஆத்மா சாந்தியடையதினமும் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி சாந்தி!

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

629, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

[56091]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் ஆசிரியர் சம்பள உயர்வு வடக்கு-கிழக்குக்கு இன்னும் இல்லை

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, மே 19

கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் அந்தச் சம்பள உயர்வு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் கவனயீனமான, அக்கறையற்ற நிர்வாகப் போக்கே இதற்குக் காரணம் ஆகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;—

கல்முனை மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களுக்கு அவர்களின் மாதாந்த அலவன்ஸாக 2,500 ரூபா வழங்காமல் 2,200 ரூபாவை வழங்குவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

1—7—97 ஆம் திகதி முதல் பயிலுநர் ஆசிரியர்களின் அலவன்ஸ் 2 ஆயிரம் ரூபாவில் இருந்து 2,500 ரூபாவாக உயர்த்தப்பட்டிருந்தது.

நாட்டின் ஏனைய பாகங்களில் 2,500 ரூபா வழங்கப்படுகிறது. ஆனால் வடக்கு—கிழக்கில் இவ்விடயத்தில் சீரான போக்குக் காணப்படவில்லை. மாகாண கல்வியமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் கவனயீனமான அக்கறையின்மையற்ற நிர்வாகப் போக்கினாலேயே நிர்வாகம் மாவட்ட மட்டங்களில் வேறுபட்டுக் காணப்படுகிறது.

சில மாவட்டங்களில் 2,500 ரூபா அலவன்ஸ் வழங்கப்பட்டது. சில மாவட்டங்களில் வழங்கப்படவில்லை. சிலமாவட்டங்களில் நிலுவை வழங்கப்படவில்லை.

இந்த முரண்பாடுகளை நீக்க மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## திக்கம் வடிசாலை உபகரணங்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தன

திக்கம் வடிசாலையின் திருத்த வேலைகளுக்குரிய உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வடிசாலையின் வடிகலன்களும், வேறு இயந்திர சாதனங்களும் பழுதடைந்து செயலற்றிருந்தன.

இதனால் வடமராட்சிப் பகுதியில் உற்பத்தியாகும் பெருமளவு கள் இங்கு பயன்படுத்த முடியாதநிலையில் கள் சங்கானை வடிசாலைக்கு அனுப்பப்பட்டு வந்தது.

தற்பொழுது யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொழும்பிலிருந்து சில உதிரிப்பாகங்களை கப்பல்மூலம் கொண்டு வந்து சேர்ந்துள்ளது.

இவற்றில் வடிகலன் மூடிகளும் அடங்குகின்றன.

(இ—109)

## மின் விநியோக ஆரம்ப வேலைகள்

யாழ். மாவட்டத்தில் மின் விநியோகத்துக்கான ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மின்சார சபை ஊழியர்களினால் மின் விநியோகப் பாதைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை காங்கேசன் துறையிலிருந்து ''கூல் எயார்'' நிறுவனத்தினால் இயக்கப்படவுள்ள மின் நிலையத்துக்கென 1.5 மெகவாட் மின்வலுவுடைய ஜெனரேட்டர் ஒன்று கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

மேலும் ஏழு ஜெனரேட்டர்கள் இந்த மின் நிலையத்துக்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன.

(இ—5)

## பௌதிக பாட திட்டத்துக்கு இரண்டு புதிய அலகுகள்

பருத்தித்துறை, மே 19

கல்விப் பொதுத்தராதர உயர்தர பௌதிக பாடத் திட்டத்தில் இரண்டு புதிய அலகுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்று சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) இலத்திரனியல் (ii) சடமும் கதிர்ப்பும் என்ற இந்த இரண்டு புதிய அலகுகளுக்கும் தற்போதைய வடக்கு—கிழக்கு கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகராக விளங்கும் ஈ. ஜே. சற்குணராஜாவால் எழுதப்பட்ட 'சடமும் கதிர்ப்பும்' என்ற நூலினை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(இ-118)

## கால்நடை விவரம்திரட்ட நடவடிக்கை

வலி.தென்மேற்கு, மே 19

நவாலி விவசாயிகள் சம்மேளனம் கால் நடைகளின் விவரங்களை உடன் திரட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சம்மேளனத்தலைவர் மா. செல்வராசா தெரிவித்துள்ளார்.

கால் நடைகளின் விவரம் நவாலி வடக்கு, நவாலி தெற்கு, நவாலி கிழக்கு ஆகிய பகுதிகளில் திரட்டப்பட்டதன் பின்னர் கால் நடைகளுக்கு இலக்கங்கள் இடும் முறை கொண்டுவரப்படும். (இ-18)

## இனப்பிரச்சினைத் தீர்வு
## இந்தியாவின் பங்களிப்பை ரெலோ கோருகிறது

யாழ்ப்பாணம். மே 19

இலங்கையில் தமிழ் மக்கள் சுயகௌரவத்துடனும், மரியாதையுடனும் வாழக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்தியா தனது பங்களிப்பைச் செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம் வந்த இந்திய தூதரக கவுன்ஸிலர் சச்சதேவ் ராஜேஸ்குமாரிடம் மேற்கண்டவாறு ரெலோ அமைப்புக் கோரியுள்ளது

ரெலோ அமைப்பு அவரிடம் நேரடியாகக் கையளித்த மகஜர் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளில் தலைவர்களைச் சந்திக்க நீங்கள் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் எமது அமைப்பையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

உடனடி யுத்தநிறுத்தம் நிபந்தனையற்றபேச்சு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்றல், நியாயமான அரசியல் தீர்வு, நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நூறு நாள்களுக்கு பதவிப் பிரமாணம் எடுப்பதில்லை என்று முடிவு செய்துள்ளோம். அதுவரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்றும் முடிவு செய்துள்ளதால் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு இந்தியா உதவவேண்டும். வடக்கு — கிழக்கில் ஆயிரக்கணக்கானவர்கள் பெருமளவு பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர் இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ —3)

## நெடுங்கேணியில் கைதான இருவரும் விடுதலை

வவுனியா, மே 19

நெடுங்கேணி கருவேலன் கண்டல் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்ற சமயம் கடந்த 9 ஆம் திகதி கைதான இருவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

ரட்ணம் ராகுலன் (வயது—24), செல்லத்துரை முத்துலிங்கம் (வயது—34) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

கெப்பிட்டிக்கொலாவ நீதிமன்றத்தில் கடந்த சனியன்று ஆஜர் செய்யப்பட்டு இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இருவரையும் பொறுப்பேற்க செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோர் இருவரையும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-164-3)

## விளையாட்டுப் பயிற்றுநர் பற்றாக்குறை நீங்கும்

பருத்தித்துறை, மே 19

வடக்கு—கிழக்கு மாகாண அனைத்து மாவட்டங்களிலும் நிரந்தர விளையாட்டுப் பயிற்றுநர்கள் இல்லாத பெரும்குறை நீண்டகாலமாகக் காணப்படுகிறது.

இக்குறையைத் தீர்ப்பதற்கு விளையாட்டு அலுவலர்களாக பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்து பயிற்றுநர்களுக்குரிய சான்றிதழ் ஒன்றுடன் டிப்ளோமாபாடநெறியினையும்பயின்றுள்ளவர்களை பயிற்றுனர்களாகத் தரம் உயர்த்த வடக்கு—கிழக்கு மாகாண விளையாட்டுத் துறைச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

(இ-118)

## சிறுவரை நல்வழிப்படுத்த சிறுவர் அபிவிருத்தி கழகம்
### பிரதேச செயலர் பிரிவுகளில் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 19

சிறுவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் சிறுவர் அபிவிருத்திக் கழகங்கள் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை கட்டைப்பிராய் கிராமத்திலும், வடமராட்சி வடக்கு பகுதியில் கெருடாவில் தெற்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலும், மல்லாகம் நீதிவான் நலன்புரி முகாமிலும் இந்தக் கழகங்கள் அமைக்கப்பட்டன.

கட்டைப்பிராயில் அமைக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்திக் கழகத்தினால் 'இளஞ்சுடர்' என்னும் பெயரில் கையெழுத்துப் பிரதி ஒன்று வெளியிடப்பட்டது.

இக்கையெழுத்துப் பிரதியினை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை திருமதி சிவஞானம் பாலதயானந்தன் வெளியிட்டு வைத்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இத்தகைய சிறுவர் அபிவிருத்திக் கழகங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சிறுவர் அபிவிருத்தி நிலையம் சிறுவர்களின் நிலை தொடர்பாக ஒன்பது பிரதேச செயலர் பிரிவில் நடத்திய ஆய்வுகளின் படி 207 சிறுவர்கள் பெற்றோரை இழந்தவர்களாகவும், 264 சிறுவர்கள் அங்கவீன முடையவர்களாகவும் 1, 235 சிறுவர்கள் ஆதரவற்றவர்களாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பிறப்புச்சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்கு இச்சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் மேற்படி நிலையம் ஈடுபட்டு வருகிறது.

மேலும் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத சிறுவர்களின் பெற்றோர்கள் சிறுவர் அபிவிருத்தி நிலையம் 23, கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்.

(இ-5)

## ஓய்வு

யாழ்ப்பாணம், மே 19

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் உப அதிபராகப் பணிபுரிந்த திருமதி ஜெயமலர் நித்தியானந்தன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1990 ஆம் ஆண்டுமுதல் அப்பாடசாலையின் உப அதிபராகப் பணியாற்றி அவர் ஓய்வு பெற்றுள்ளார்.

(இ-3)

## வலிகாமம் மேற்கில் உருளைக்கிழங்கு செய்கை

மூளாய், மே 19

வலிகாமம் மேற்கில் உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவிப்பதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

எதிர்வரும் பெரும்போகத்தின் போது உருளைக்கிழங்குச் செய்கையை அதிகளவு பரப்பில் செய்கை பண்ணுவதற்குரிய ஏற்பாடுகள நடைபெற்றுவருகின்றன.

மேலும் இச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் மூலமாக பத்தாயிரம் ரூபா வரையிலான கடன் வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்று பிரதேச செயலர் கா. சந்திரராஜா தெரிவித்தார்.

(இ-99)

## கட்டாக் காலிகளை கட்டுப்படுத்த கோரிக்கை

வலி. தென்மேற்கு, மே 19

கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையினால் நவாலி விவசாயிகள் சம்மேளனத்துக்கு உட்பட்ட வயல்களில் சிறு தானியங்கள் அழிந்து வருகின்றன.

நவாலி தெற்கு —வழுக்கை ஆறுப் பகுதிகளில் எள்ளுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட சிலருக்கு ரூபா 10 ஆயிரம் முதல் ரூபா 25 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சில விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச்செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துமாறு உடுவில் கமநலகேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கிராம அலுவலர்கள் சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோரிடம் மக்கள் கோரி உள்ளனர்.

(இ-185)

## கசிப்புவேட்டைக்கு சென்ற பொலீஸாருடன் மோதல்

வவுனியா, மே 19

வவுனியா கற்குழி தோணிக்கல் பிரதேசத்துக்கு கசிப்பு வேட்டைக்குச் சென்ற பொலிஸ் கோஷ்டிக்கும் பிஸ்டல்குழு உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. ஞாயிறு மாலை 6-30மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

பின்னர் அப்பகுதியில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

(இ-13-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

பார்மசிக்குரிய அலுமாரிகள், கவுண்டர் சோக்கேஸ் முதலியன விற்பனைக்கு உண்டு. பார்வையிடலாம். நோதேன் பார்மசி, இல. 562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [56039]

**வீடு வாடகைக்கு**

வைமன் றோட் யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சோல்டன் பிங், 154, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [56077]


## அ. அட்டை பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம், மே 19

வலி. மேற்கு பிரதேசத்தில் மீளக் குடியேறிய மக்கள் விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்திலிருந்து அண்மையில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியோரே விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர். (இ-5)

## தண்ணீர்த் தாங்கி புனரமைப்பு

அரியாலை, மே 19

யாழ். பிரதான வீதியில் உள்ள தண்ணீர்த் தாங்கி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஜேர்மன் தொழில் நுட்ப உதவித்திட்டத்தின் உதவியுடன் தண்ணீர்த்தாங்கியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த தண்ணீர்த்தாங்கி புனரமைக்கப்பட்டதும் குழாய் மூலம் கரையோர பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் ஆரப்பிக்கப்படும். (இ-17)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மே 19

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் நா. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி நா. தருமலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் செல்வி ம. சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (இ-3)


**வர்த்தகர்கள் அலுவலகங்கள்**

கண்டிப்பாக வைத்திருக்க வேண்டிய

- ★ நேரப் பதிவேடு (வரவு இடாப்பு)
- ★ சம்பளப் பதிவேடு
- ★ ஊ. சே. நிதிப்படிவம்
- ★ ஊ. ந. நிதிப்படிவம்

யாவும் எம்மிடம் கிடைக்கும்.

**ஆனந்தா புத்தகசாலை**

226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 2820

(56051)


# தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. சிறுவர் மேம்பாட்டு திட்டம்

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் சிறுவர் மேம்பாட்டு திட்டம் ஒன்றை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பித்துள்ளது.

பாதிப்புற்ற சிறுவர்களை இனங்கண்டு அப்பகுதி மக்களின் உதவியுடன் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதே இத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இத்திட்டத்தின் அடிப்படையில் தெல்லிப்பழை பலநோக்குகூட்டுறவுச் சங்க கிளைகளில் உண்டியல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

பொருள்களைக் கொள்வனவு செய்ய வரும் மக்களிடம் இருந்து பெறப்படும் அன்பளிப்புப்பணம் இத்திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும். எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-17)


ஸ்ரீ ராமஜெயம்

**பொன்னாலை**

**ஸ்ரீ வரதராசப்பெருமாள் தேவஸ்தான பரிபாலன சபை**

மேற்படி தேவஸ்தான பரிபாலனசபையில் அங்கத்தவர்களைப் புதிதாக சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் அங்கத்தவர்களாக சேரலாம்.

1) பொன்னாலை, நெல்லியான் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.
2) ஆவணி, மார்கழி மகோற்சவ உபயகாரர்கள்.
3) மேல் 1, 2 இல் குறிப்பிட்ட 18 வயதுக்கு மேற்பட்ட சைவசமயத்தவர்கள்.

சந்தாப்பணம்– 1) சாதாரண சந்தாப்பணம் ரூ. 100 வருடம் ஒன்றிற்கு
2) ஆயுட்கால சந்தாப்பணம் ரூ. 1000

குறிப்பு– ஏற்கனவே பணம் செலுத்தி உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்பப் படிவம்– தேவஸ்தான பரிபாலனசபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி– **15 - 06 - 1998**

சிவப்பிரகாசம் கயிலநாதன்
தர்மகர்த்தாவும், முகாமையாளரும், சபைத்தலைவரும்.

பரிபாலன சபை
பொன்னாலை வரதராசப் பெருமாள் தேவஸ்தானம்

(56087)



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்**



பிறப்பு 1923 — 03 — 24

இறப்பு 1998 — 04 — 22

திருமதி

**துரையப்பா தங்கச்சியம்மா**

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான துரையப்பா – தங்கச்சியம்மா 22 – 04 – 98 அன்று கொழும்பில் சிவபதமடைத்தார்,

இவர் துரையப்பாவின் அன்பு மனைவியும், செல்லையா பூரணத்தின் அருமை மகளும், காலஞ் சென்ற சின்னராசாவின் அன்புச் சகோதரியும், பூமணி, அப்புத்துரை ஆகியோரின் அருமை மைத்துனியும், குகனேஸ்வரி, குணசீலன் (ஜேர்மன்), காலஞ் சென்ற வரதராசா, கோமதி - ஸ்ரீதேவன் (கொழும்பு), லோகராசா – சுமதி (ஜேர்மன்), சுமதி – லோகநாதன் (ஜேர்மன்), நவரெட்ணராசா – சுராணி (ஜேர்மன்) ஆகியோரின் அருமை மாமியும், சகிலா, சசீலன், சுகிர்தன், றோபேட், மிருதுவா, ஹிரிநாஷ், கபில்நாஷ்சின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கொழும்பில் 22 - 05 - 98 அன்று நடைபெறும்.

தகவல்
திருமதி சின்னராசா - பூமணி

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(56085)


# வடக்கு - கிழக்கு ஆசிரியர் நியமனம்

பருத்தித்துறை, மே 19

வடக்கு— கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு குறைந்துள்ளது.

அண்மையில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரிய பரீட்சையில் இருந்துவடக்கு கிழக்கு மாகாணசபைக்கு ஆயிரத்து32 பேருக்கு கல்விச் சேவை ஆணைக்குழு நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழகியது.

ஆனால் 922 பேர் மாத்திரம் தமது வதிவிட அத்தாட்சிப்பத்திரம் மற்றும் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்து தகுதிகாண் ஆசிரிய நியமனத்தைப் பெற்றனர்.

110 பேர் தமது வதிவிட அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறியமையால் தகுதிகாண் ஆசிரிய நியமனத்தைப் பெறத் தவறினர். இதற்கு சிலபிரதேச செயலர் பிரிவு கிராமசேவகர்களும், பிரதேச செயலர்களும் முட்டுக்கட்டைகளாக இருந்துள்ளனர் என சம்பந்தப் பட்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (இ – 118)

# பழமரச் செய்கைக்கு மானியம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மே 19

விவசாய திணைக்களத்தினால் வழங்கப்படும் பழ மர மானியத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலும் பழ மரச் செய்கைக்கு மானியம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 34 ஏக்கர் வாழைச் செய்கைக்கும், 2 ஏக்கர் கொய்யாச் செய்கைக்கும், ஓர் ஏக்கர் தோடைச் செய்கைக்கும், ஓர் ஏக்கர் மாதுளைச் செய்கைக்கும் பழ மர மானியம் வழங்கப்படவுள்ளது.

பழ மர மானியத்திற்கான விண்ணப்பங்கள் யாழ். விவசாயத்திணைக்களத்தினால் ஏற்கனவே பெறப்பட்டு வடக்கு – கிழக்கு மாகாண சபை விவசாயப் பணிப்பாளருக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயப் பணிப்பாளரின் அனுமதி கிடைத்ததும் விண்ணப்பித்தவர்களுக்கு பழ மர மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# தமிழ்த்தினப் போட்டி இறுதி நாள் வைபவம்

பருத்தித்துறை, மே 19

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டி இறுதி நாள் வைபவம் ஜூன் 20 ஆம் திகதி திருகோணமலையில் நடத்தப்படவுள்ளது.

மாகாண போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உணவு வழங்கல்களோ, போக்குவரத்து வசதிகளோ மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது. ஆனால் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் மாணவர்கள் தங்குவதற்கு பாடசாலைகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தமிழ் மொழித்தினத்திற்கான நடுவர்களின் பெயர்ப் பட்டியலை சகல வலயப் பணிப்பாளர்களும்மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டுபோல பெற்றோரும், ஆசிரியர்களும் நிகழ்ச்சிகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யக் கூடாது என்றும் — போட்டிகளின் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் — வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார். (இ-118)


**10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் சங்கரப்பிள்ளை கிருஷ்ணராசா
(நியூஸ் பேப்பர் ஏஜென்ட், இணுவில்)

மலர்வு 07–02–1941

உதிர்வு 07–06–1988

திதி: 19 - 05 - 1998

ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறிடுமோ எம்இதயம்
எமக்கு நல்வழிகாட்டி ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

61, பிறவுண் றோட்,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(55989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எப்போது வரும் அமைதி?

யாழ்ப்பாணம் மாநகர சபையின்முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தினால் மக்கள் பெரும் சோகம் அடைந்துள்ளனர்; அதிர்ச்சி அடைந்துள்ளனர். எங்கள் பிரதேசத்துக்கு இப்போதைக்கு அமைதி திரும்பாது என்ற எண்ணத்தை இச்சம்பவம் வளர்த்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வரான அல்பிரட் துரையப்பாவும் 23 வருடங்களுக்கு முன்னர் இவ்வாறே படுகொலை செய்யப்பட்டார். தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் காலகட்டத்தின் நடு வேளை அது.

அக்காலத்தில் குழம்பிய அமைதி, குலைந்துபோன அமைதி இன்னும் திரும்பவில்லை. மக்கள் நிம்மதியான, சுதந்திரமான வாழ்க்கை நடத்த முடியவில்லை. அதற்காக மக்கள் ஏங்கும், எதிர்பார்க்கும் நிலை இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்த நிலை தொடர்வதற்கான காரணம் யாது என்பது ஆழமாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி, அவர்களும் இந்த நாட்டில் சமபிரஜைகளாக வாழ வகை செய்வதற்கு எந்தச் சிங்கள அரசும் விரும்பியது இல்லை. அதனால் தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்த காலம் முதல் அவர்களை அடக்குமுறைக்கும், ஆதிக்கத்துக்கும் ஆட்படுத்தும் நடவடிக்கைகளையே பதவிக்கு வந்த எல்லா அரசுகளும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தன.

சமாதான வழியில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டபோதிலும், தென்னிலங்கைத் தலைவர்களிடம் இதயசுத்தியும் நேர்மையும் இல்லாமையால் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

இப்போது கூட, சமாதான முயற்சிகள் ஓரங்கட்டப்பட்டு, போரைத் தொடர்வதிலேயே ஆர்வமும் அக்கறையும் காட்டப்படுகிறது.

இதேவேளை, தமிழ்த் தலைவர்களிடையே பல தசாப்தங்களாக நிலவும் ஒற்றுமை இன்மையும் தமிழ் மக்களின் இன்றைய அமைதியற்ற, நிம்மதியற்ற, பாதுகாப்பு இல்லாத, அச்சம் கலந்த வாழ்க்கைக்குப் பிரதான காரணம் என்பதனை மறந்துவிடுவதற்கில்லை. கருத்து வேற்றுமை பகைமையாக மாறும் தன்மை பெற்றதால் இன்றைய நிலை உருவானது.

எனவே தமிழ்ப்பிரதேசங்களுக்கு அமைதி நிலை மீளவேண்டுமானால் தெற்குத் தலைவர்களிடம் இதயசுத்தியும் நேர்மையும் வர வேண்டும். தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை மலரவேண்டும். இவற்றையே தமிழ்மக்கள் விரும்புகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள்.

# போராளிகளை சமாதான வழிக்கு வரச் செய்வது அரசின் கடமையே!

''இனரீதியில் அடைந்த பிரச்சினைக்கு யுத்த ரீதியாகத் தீர்வு காண முடியாது'' என்ற தலைப்பில் ''ராவய'' சிங்கள இதழில் வெளியான விமர்சனக் கட்டுரையின் தமிழாக்கம் இது.

''ஜயசிகுறு'' நடவடிக்கையில் எஞ்சியுள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தைக் கைப்பற்ற மேலும் ஆகக் குறைந்தது 15 ஆயிரம் படையினர் தேவைப்படுகின்றனர். விண்ணப்பங்களைக் கோரி படைக்கு ஆட்சேர்க்க முடியாத நிலையில் பாதுகாப்பு அமைச்சு உள்ளது. பாடசாலைகளை விட்டு விலகும் இளைஞர்களைப் படையில் சேர்ப்பதற்காக கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுடன் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு பாதுகாப்புப் படைகள் திட்டமிடும் நிலைமை உருவாகியுள்ளது.

## அரசு நேர்மையுடன் செயற்படவில்லை

ஜயசிகுறு நடவடிக்கையின் போது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கும் தமிழ் மக்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியேற்றி பாதுகாப்பு வழங்குவதற்கும் முல்லைத்தீவிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரதான முகாம் மீது தாக்குதல்களை மேற்கொள்ளுவதற்கும் கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும், மென்மேலும் படையினரை சேர்க்க வேண்டிய நிலை பாதுகாப்புத் துறையினருக்கு ஏற்படும். அப்போது கிராமப்புற இளைஞர்களைக் கூட படையில் சேர்ப்பது கடினமான பணியாக இருக்கும். நிலைமை அவ்வளவு தூரம் மோசமானால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அரசு கட்டாய இராணுவ சேவையை அமுல்படுத்த வேண்டிய நிலை உருவாகும்.

கெரில்லாப் போரை எதிர்நோக்கும் எந்தவெரு நாட்டின் அரசும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இங்குள்ள நிலையை விட வித்தியாசமானவை அல்ல என்பதை பிலிப்பீன்ஸ், சூடான், அங்கோலா ஆகிய நாடுகள் மட்டுமன்றி வியட்னாமில் அமெரிக்காவும் உலகத்திற்கு எடுத்துக்காட்டின.

செச்சினியா கெரில்லாக்களுடன் யுத்தத்தில் ஈடுபட்ட வல்லரசான ரஷ்ய அரசு 3 ஆண்டுகள் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் சமாதான உடன்பாட்டிற்கு வந்தது. 36 வருடங்களாக கெரில்லாக்களுடன் யுத்தத்தில் ஈடுபட்ட கௌதமாலா அரசு சமாதான உடன்பாட்டிற்கு இணங்கியது. 26 வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்ட பிலிப்பீன்ஸ் அரசு மோறோ தேசிய விடுதலை முன்னணியுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டது. பிலிப்பீன்ஸில், கம்யூனிஷ்ட கெரில்லாக்களுடன் 40 ஆண்டுகளாக அரசு யுத்தத்தை நடத்தி விட்டு தற்போது சமாதான உடன்பாட்டுக்கு வந்துள்ளது. பல

### பகுதி – 2

தசாப்தங்களாக சண்டையில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்கள் அதே போல தென்ஆபிரிக்காவில் இடம்பெற்ற வெள்ளையர்களின் நிர்வாகம், அங்கோலா மற்றும் காம்போஜி அரசுகள், பல தசாப்தங்களாக அயர்லாந்து கெரில்லாக்களுடன் யுத்தத்தில் ஈடுபட்ட பிரித்தானிய அரசு, எமது அயல் நாடான பங்களாதேஷின் அரசு, இந்தியாவில் சாந்தி பாஹினி, மிசோராம், அசாம், நாகலாந்து கெரில்லாக்களுடன் இந்திய அரசு – ஆகியன சமாதான உடன்பாடுகளுக்கு வந்து யுத்தத்தில் இருந்து தங்கள் நாடுகளைக் காப்பாற்ற முயற்சித்தது ஏன் என்பது குறித்து கண்டறிவது ஆட்சியிலுள்ளவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

இன அடிப்படையில் உருவான பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியுமாயின் வல்லரசான ரஷ்யாவுக்கு சிறுபான்மையினரான செச்சினியர்களுடன் உடன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது; சிறிலங்காவில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பிலும் பார்க்க ஆற்றல் குறைந்த அயர்லாந்துக் கெரில்லாக்களுடன் பிரிட்டிஷ் அரசு சமாதான உடன்பாட்டிற்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது; 20 லட்சம் நிரந்தர இராணுவ வீரர்களையும் அதி உயர் தொழில் நுட்பம் வாய்ந்த யுத்த உபகரணங்களையும் கொண்ட இந்திய அரசு நாகலாந்து மற்றும் போடோ கெரில்லாக்களுடன் சமாதான உடன்பாட்டிற்கு வரவேண்டிய தேவை ஏற்படாது.

### முரட்டுத் தீர்மானம்

கெரில்லாப் போராட்டத்தை யுத்த ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும்; தோற்கடிக்க முடியும் என்ற முரட்டுத் தீர்மானத்தால் அழிவுதரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளான பேரு, ஹொண்குராஸ், ஆபிரிக்காவில் நைஜீரியா, சூடான், லைபீரியா, றுவண்டா, புருண்டிக் மற்றும் ஆசியாவில் ஆப்கனிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளும் வறுமைமிக்க முன்னேறாத நாடுகளாக மட்டுமேவிளங்குகின்றன. சிறிலங்காவிலும் ஜே. ஆர்,. பிரேமதாசா, மற்றும் சந்திரிகா ஆகியோரின் அரசுகள் சமாதானத் தீர்வுக்கு முயற்சி எடுக்க வில்லையா என எவரும் வாதிக்க முடியும்.

ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் ராஜீவ் காந்தியின் தலையீட்டில் சமாதான உடன்பாடொன்றைக் காணபூட்டானிலுள்ள திம்பு நகரில இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் [illegible] பங்கு பற்றியவர்கள் தீர்மானமெடுக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தனர்.

முதலாவது ஈழ யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இடம் பெற்றஇந்த திம்புப் பேச்சு வார்த்தைக்கு சிறிலங்கா அரசின் சார்பில் பங்கு கொண்ட பிரதிநிதிகளின் குழுவிற்கு வடபகுதிப் பிரச்சினைகள் குறித்து போதியளவு அறிந்திராதவரும், அரசில் பொறுப்பான பதவி எதையும் வகிக்காதவருமான சட்டத்தரணி எச். டபிள்யு. ஜயவர்த்தன தலைமை வகித்தார்.

சிறிலங்காவுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் போது தொடர்புடைய பிரச்சினை குறித்து அறிந்திருக்க வேண்டிய தேவையை விட ஜனாதிபதியின் உறவு முறைக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது.

முதலாவது ஈழ யுத்தம் முடிவடைந்து ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான போதிலும் அப்போதும் வடபகுதிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வொன்றைத் தேடுவதற்குப் பதிலாக இந்திய அமைதிப் படையை வெளியேற்றுவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. அவ்வாறே அப்பேச்சுவார்த்தைகளின் போது உரிய திட்டங்களோ, வழிமுறைகளோ, தீர்வுகளோ முன்வைக்கப்படாது பொது எதிரியாக் இந்தியாவைக் கருதி காரியங்கள் இடம்பெற்றதால் அதை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி எனக் கருத முடியவில்லை.

இன அடிப்படையில் உருவாகும் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியுமாயின் சிறிலங்காவிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பைவிட ஆற்றல் குறைந்த அயர்லாந்து கெரில்லாக்களுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டிய தேவை பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்டிருக்காது. சிறுபான்மையினரான செச்சினியர் விடயத்தில் வல்லரசான ரஷ்யா விட்டுக் கொடுத்திருக்க வேண்டிய தேவைஏற்பட்டிருக்காது. சர்வதேசமே ஏற்றுக் கொண்ட இந்த விடயம் சிறிலங்காவில் ஆட்சியில் உள்ளவர்களுக்குப் புரியாமல் உள்ளது துரதிர்ஷ்டமே.

இதையடுத்து இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறவில்லையா என யாரும் கேட்கக் கூடும்.

### கணக்கில் எடுக்கவில்லை

1994 ஒகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது வடபகுதி யுத்தத்திற்கு சமாதானத் தீர்வு வழங்கப்படும் என வாக்குறுதி அளித்து ஆட்சி அதிகாரத்திக்கு வந்த சந்திரிகா அம்மையார் தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு, விடுதலைப் புலிகள் அமைப்புடன் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு 1995 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தபோதிலும்,பேச்சு வார்த்தைகளில் பங்குபற்ற அனுப்பப்பட்ட அரச தரப்புப் பிரதிநிதிகளில் வடபகுதிப் பிரச்சினை குறித்து நன்கு அறிந்திருந்த ஒரேயொரு பிரதிநிதி லயனல் பெர்னான்டோ மாத்திரமே என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயமாகும்.

எந்தவொரு திட்டமும் இன்றி வடக்கே சென்ற அரச பிரதிநிதிக்குழுவினரால் உருப்படியாக எதையுமே மேற்கொள்ள முடியவில்லை.

1995 இல் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகள் முன்வைத்த நிபந்தனைகளில் முக்கிமான நிபந்தனை என்னவெளில் பூநகரி இராணுவ முகாமை போக்குவரத்து வீதியிலிருந்து சிறிது பின்புறம் அகற்றி விடுதலைப் புலிகள் சென்றுவர வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இந்த நிபந்தனைக்கு அரசாங்கம் உடன்படாத வேளையில் 1995 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் பூநகரி முகாம் பின் நோக்கி அகற்றப் படாவிடின் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து தாம் ஒரு தலைப் பட்சமாக விலகிக் கொள்வதாக 1995 மார்ச் மாதம் 28 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இருந்த போதிலும் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் கணக்கெடுக்கவில்லை. ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அதிகாலை திருகோணமலைத் துறைமுகத்தில் தாக்குதலை மேற்கொண்டு தாங்கள் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாக அரசுக்கு விடுதலைப்புலிகள் தெரிய வைத்தனர்.

அதன் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக விடுதலைப் புலிகளை யுத்தரீதியாகத் தோற்கடிப்பது என அரசு தன்னிச்சையாக முடிவெடுத்தது. அரசாங்கத்தின் இந்த முடிவானது உலக நாடுகள் பெற்ற அனுபவத்தை வைத்து எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது.

அயர்லாந்து, பிலிப்பீன்ஸ், பலஸ்தீனம் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் பட்ட வேளைகளில் அந்த நாடுகளில் இடம் பெற்ற கலவரங்களும் படுகொலைகளும் அந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பாததற்குக் காரணம், அந்த நாடுகளின் தலைவர்கள் சமாதானம் உருவாக்கப்பட வேண்டிய தேவையை உணர்ந்து நேர்மையுடன் செயற்பட்டதே எனக் கூறுவது தவறாகுமா?

சமாதானம் தேவைப்படுவது அரசுக்கும் அந்த

( 8 ஆம் பக்கம் பார்க்க)

தமிழில்: கஜனி

### நாளை

வைகாசி - 06
புதன்கிழமை
திதி: நவமி
பிற்பகல்03. 40 வரை:
நட்சத்திரம்: சதயம்
முற்பகல் 09.54 வரை:
சுபநேரம்: 04.22 –05.52
ராகுகாலம்: 11.52 –01.22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உணர்ச்சிகள் அடக்கி ஆளப்பட வேண்டியவை. அவைகளோடு நியாயம் பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

– ஸ்ரான்லி ஜோன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணியில் விசேட பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள்

## யாழ்ப்பாணத்தில் ஈடுபடுத்தப்படும்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கண்ணிவெடி அகற்றும் பணியில் விசேட பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படும்.

கண்ணிவெடிகள், பொறிவெடிகள் புதைத்து வைக்கப்படும் இடங்களைக் கண்டு பிடிக்க இந்த நாய்கள் உதவும்,

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட கண்ணிவெடி அகற்றும்திட்ட இணைப்பாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கண்ணி அகற்றும் திட்ட இணைப்பாளர் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யார்ழ். செயலக பயிற்சி அறையில் கூட்டம் ஒன்றைக்கூட்டுகிறார்.

கண்ணி அகற்றும் திட்டம் தொடர்பாக பொது மக்கள் தமது கருத்துக்களை ஆலோசனைகளை தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் இருக்கும் இடங்களை மதிப்பீடு செய்வதற்கு இந்த ஆலோசனை உதவியாக அமையும். மக்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணி பயங்கரமானது என்ற கருத்து பலர் மத்தியில் நிலவுகிறது.

சரியான திட்டத்துக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு விசேட பாதுகாப்பு உடுப்புக்கள் வழங்கப்படும். அத்துடன் கண்ணி வெடி இருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க விசேட பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படும்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக இந்தப் பணியில் ஈடுபட்ட அனுபவம் வாய்ந்தவர்கள் இதில் ஈடுபடுத்தப்படுவர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.)

(இ-3)

## தற்காலிகக் குடிசைகள்

யாழ்ப்பாணம், மே 19

மயிலிட்டி, தையிட்டி, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 75 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

(இ-7)

## வடமராட்சி கிழக்கில் நடமாடும் செயலகச்சேவை

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையினர் கிராமங்கள் தோறும் நடமாடும் செயலகச் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

முதற்கட்டமாக பொற்பதி கிராம அலுவலகத்தில் கடந்த 14 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இச்சேவை ஆரம்பிக்கப்பட்டு மாலை 4.30 மணிவரை நடத்தப்பட்டது.

குடத்தனை, மணற்காடு பொற்பதி பகுதி மக்களது பிரச்சினைகளை நடமாடும் செயலக அதிகாரிகள் குழு கேட்டறிந்ததுடன் சில பிரச்சினைகளைதீர்த்தும் வைத்துள்ளது. நடமாடும் செயலக அதிகாரிகள் குழுவுக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் சி. பசுபதி தலைமை வகித்து வருகிறார்.

இவருடன் செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு. இ. சிவபுண்ணியமும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க. ஈஸ்வரபாதமும் இப்பகுதி மக்களது காணி சம்பந்தமான பிரச்சினைகளை காணி உத்தியோகத்தர் மு. நடராசாவும் கிராம அபிவிருத்தி பற்றிய நடவடிக்கைகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சீவரத்தினமும் மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்தகட்டமாக நடமாடும் செயலகச் சேவை செம்பியன்பற்றில் இடம் பெறும் என உதவி அரச அதிபர் சி. பசுபதி தெரிவித்தார்.

(இ-39)

## கலைமகள் வித்தியாலயம் புனரமைக்கப்படும்

### ஐ. நா. தூதரகம் உதவி

சண்டிலிப்பாய், மே 19

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஐந்து இலட்சம் ரூபா நிதியை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் இது விடயமாக மேற்கொண்ட முயற்சியினால் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மேற்படி வித்தியாலய அதிபர் நா. சிவராசா தெரிவித்தார்.

(இ-185)

## 31 விளையாட்டலுவலர் ஜூன் முதல் நியமனமாவர்

வடக்கு—கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் 31 விளையாட்டலுவலர்கள் ஜூன் முதலாம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் நடைபெறவுள்ள நியமனங்கள் அனைத்தும் இன விகிதாசார அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தவெற்றிடங்களில் அரை வாசிக்கும் மேற்பட்ட நியமனங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பூர்த்தி செய்யப்படவுள்ளன என வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

(இ-118)

## சிமெந்து விநியோகம் குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 19

'மேர்ஸ்ஹண்டி' கப்பலில் கப்பல் கட்டணமின்றி எடுத்துவரப்பட்ட சிமெந்து, கோழித்தீன் விநியோகம் தொடர்பாக கிராமசேவை உத்தியோகத்தர்கள் சிபார்சு செய்வதற்கு முன்பு தங்கள் பிரதேச செயலருடன் கலந்தாலோசித்து ஒதுக்கப்பட்ட அளவுக்கு மேற்படாத வகையில் ஒரு நடைமுறையினைப் பின்பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிமெந்து பெறுவதற்காகக் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் பெருமளவு விண்ணப்பங்கள் வந்துசேர்ந்துள்ளன.

இந்த விண்ணப்பதாரர்களுக்கு விநியோகிக்கக்கூடிய அளவுக்குக் கப்பலில் எடுத்து வரப்பட்ட சிமெந்து போதாமலுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விவரம் ஒவ்வொரு பிரதேச செயலருக்கும், மிருக வைத்திய அதிகாரி பிரிவுக்கும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## மாகாண சபைத் தேர்தல்: ஐ.தே.க. தயாராகிறது

கொழும்பு, மே 19

தெற்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத்தேர்தலுக்கு ஐ. தே. க தயாராகி வருகிறது என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம் அஸ்வர் தெரிவித்தார்.

வாலிப முன்னணிகளை புனரமைத்து கருத்தரங்குகள் நடத்தி எமது உறுப்பினர்களைத் திரட்டி வருகிறோம். மலையகத்தில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மலையகத்தில் ஐ. தே. க சார்பில் தமிழர்களை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம்- ஐ. தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான குழு ஒன்று கடந்த சில தினங்களாக மலையகத்தில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் மாகாண சபைக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியிலும் அக்குழு ஈடுபட்டது.

(இ-3)

## வடமேல் மாகாணசபை: கலைக்க ஐ.தே.க. கோரும்

கொழும்பு, மே 19

ஐ. தே. கவின் ஆட்சியில் உள்ள வட-மேல்மாகாண சபையை கலைக்குமாறு ஆளுநரைத் ஐ. தே. க கோரவுள்ளது என்று ஐ. தே. க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தெற்கில் உள்ள ஐந்து மாகாண சபைகளின் பதவிக்காலம் ஜூன் மாதத்துடன் முடிவடைவதால் அவற்றைக் கலைத்து தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் ஐ. தே. கவின் கட்டுப்பாட்டில் உள்ள வடமேல் மாகாண சபையையும் கலைத்து அதற்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று வடமேல் மாகாண சபையின் ஆளுநரை ஐ. தே. க கோரவிருக்கிறது.

ஐந்து மாகாண சபைகளுடன் இந்த மாகாண சபைக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் ஐ. தே. க. கோரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## போராளிகளை...

(ஏழாம் பக்கத் தொடர்)

அரசை அதிகாரத்தில் அமர்த்திய மக்களுக்குமே தவிர கெரில்லா அமைப்புகளுக்கு அல்ல என்பது உலகமே ஏற்றுக்கொண்ட விடயமாகும். எனவே போராளிகளை சமாதான வழிக்கு இழுப்பது அரசின் கடமையாகும்.

இருப்பினும், சிறிலங்காவில், பூநகரி இராணுவ முகாமை பின்நோக்கி நகர்த்துமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கு உடன்படாது — யுத்தம் உருவாவதற்கான பின்னணியை உருவாக்கி — அதனால் இதுவரை நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எவை என்பதை நாட்டின் சுய உணர்வுள்ள அனைவரும் அறிவர்.

1995 ஏப்ரல் மாதத்தில் பின் நோக்கி நகர்த்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்ட பூநகரி முகாம் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகிய சில மாதங்களுக்குள் அங்கிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டதும், தற்போது அந்தப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதும் எதை எடுத்துக்காட்டுகிறது? இது எமது ஆட்சியாளர்களின் தொலை நோக்கற்ற செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு நல்லதோர் உதாரணமாக அமைகிறது.

இன ரீதியாக அமைந்த கெரில்லா யுத்தத்தை யுத்த ரீதியாக முடிவுக்குக் கொண்டுவர முடியாது என சர்வதேச அரங்கில் நடைமுறை அனுபவங்களை வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

15ஆண்டுகளாக சிறிலங்கா பெற்றுள்ள அனுபவங்கள் மேலும் மேலும் இந்த சர்வதேச ஏற்புடைமையையே உறுதிப்படுத்துகிறது. ஆனால் இந்த எண்ணம் ஆட்சியில் உள்ளவர்களுக்கு உருவாகாமல் இருப்பது துரதிஷ்டமோ. இல்லையெனில் சமாதானத்தை உருவாக்க கிடைத்த சிறு வாய்ப்புகளை [illegible] ★

(முற்றும்)

## கட்டாக்காலி நாய்களால் மட்டுவிலில் தொல்லை

தென்மராட்சி மே 19

மட்டுவில்கிழக்குப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைஅதிகரித்துள்ளது - வீதிகளில் சொறிபிடித்த நிலையில் அலையும் நாய்கள் வீதிகளில்செல்வோரைக்கடித்துக் காயப்படுத்துவதாகவும்- இவற்றைப் பிடித்து அழிக்குமாறு இப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றை மகஜர் மூலம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## குடிதண்ணீர் தாங்கி அமைக்கக் கோரிக்கை

அரியாலை, மே 19

கொழும்புத்துறை மேற்கு பகுதியில் குடிதண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தைக் கேட்டுள்ளனர்.

(இ-17)


## அறிவித்தல்

யாழ். மாநகர முதல்வர்

**திருமதி சரோஜினி யோகேஸ்வரன்**

அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக யாழ். வர்த்தப் பெருமக்களை தங்கள் கடைகளை 19-05-1998 செவ்வாய்க்கிழமை பூட்டி கறுப்புக் கொடிகளைப் பறக்க விடும்படி சகல வர்த்தகர்களையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி/3770)

# - சுந்தரன் -

கலை, இலக்கிய, சமூக ஏடு

**2 ஆவது இதழ் வெளிவந்துவிட்டது!**

(சி/3767)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை அச்சுறுத்தல் இருந்ததாக மேயர் என்னிடம் ஏதும் கூறவில்லை

## மரண விசாரணையில் செயலாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம், மே 19

காலஞ்சென்ற யாழ். நகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனுக்கு நான் அறிந்த மட்டில் எவ்வித கொலைப்பயமுறுத்தலோ எச்சரிக்கையோ எவராலும் விடுக்கப்படவில்லை. இது பற்றி காலஞ்சென்றவர் என்னிடம் எதுவும் கூறவில்லை.

நேற்று யாழ். நீதிமன்றில் நடந்த சரோஜினி யோகேஸ்வரனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரின் செயலாளர் கந்தையா பூலோகரத்தினம் (46 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரண விசாரணை பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் நடைபெற்றது.

சாட்சி மேலும் சாட்சியமளிக்கையில் —

யாழ். அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் போது சட்ட வைத்திய அதிகாரியின் முன்பாகவும் பதில் நீதிபதியின் முன்பாகவும் காலஞ்சென்றவரின் சடலத்தை அடையாளம் காட்டி சடலத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டேன் என்று கூறினார்.

காலஞ்சென்றவரின் வீட்டில் வசித்து வந்த திருமதி பத்மசோதி ஜெயரட்ணம் (50 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

17 ஆம் திகதி காலை 10.15 மணியளவில் வீட்டில் நின்ற சமயம் இரண்டு இளைஞர்கள் வீட்டு விறாந்தைக்கு வந்தார்கள். காலஞ்சென்றவரை எங்கே என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு பதிலளிக்க முன் அந்த இளைஞர்களை வீட்டின் முன் ஹோலுக்குள் அமர்ந்திருந்த திருமதி யோகேஸ்வரன் உள்ளே வரச் சொன்னார்.

உடனே அந்த இளைஞர்களில் ஒருவர் திடீரென்று அவரை நோக்கி சரமாரியாக சுடும் சத்தம் கேட்டது. அச்சத்தினால் அலறியபடி வீட்டிற்குவெளியே ஓடிவந்தேன். அச்சமயம் காலஞ்சென்றவருடன் ஹோலுக்குள் கதைத்துக் கொண்டிருந்த பரமசிவம் என்பவர் ''ஐயோ'' என்று அலறும் சத்தம் கேட்டது. காலஞ்சென்றவரின் வீட்டில் பணிபுரியும் வேலன் கமலா என்பவர் ''அம்மா, அம்மா'' என்று அலறியபடி வீட்டுக்கு வெளியே வந்ததையும் கண்டேன்.

அப்பொழுது நான் உள்ளே சென்று பார்த்த போது காலஞ்சென்றவர் கதிரைக்கு அண்மையில் அவரின் அறை வாசலில் நிலத்தில் சரிந்தபடி முனகிக் கொண்டு கிடப்பதைக் கண்டேன். அச்சமயம் பரமசிவம் காலிலிருந்துஇரத்தம் வடிந்த நிலையில் நொண்டிக் கொண்டு வந்தார்.

நான் காலஞ்சென்றவரை அண்மித்து அவரது முகத்தை தடவிக்கொண்டு அவரை அணைத்தேன். அப்போது அவரின் உடலிலிருந்து இரத்தம் பெருக்கெடுப்பதை அவதானித்தேன்.

உடனே அருகிலிருக்கும் இராணுவகாவலரணுக்கு தகவல் அனுப்பினோம். 10 நிமிடத்தின் பின்னர் இராணுவமும் பொலீஸாரும் வந்து காலஞ் சென்றவரை வானில் ஏற்றிக் கொண்டு யாழ். வைத்தியசாலைக்குகொண்டு போனார்கள். பின் அங்கு அவர் இறந்து விட்டதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்திய இளைஞர்கள் எப்பக்கத்தால் போனார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் நீளக்காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்திருந்ததை நான் அவதானித்தேன். அவர்களை என்னால் அடையாளம் காட்டமுடியாது.

நடந்த சம்பவம் பற்றி இராணுவமும், பொலீஸாரும் என்னிடம் நேரில்வந்து வாக்குமூலம் பெற்றனர்-என்றார்.

காலஞ் சென்றவரின் வீட்டுப் பணியாளரான வே. கமலா (32 வயது) என்பவரும் சாட்சியமளித்தார்.

நேரில் கண்ட சாட்சி ஒருவர் சாட்சியமளிக்க வேண்டியிருப்பதால் மரண விசாரணையை எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பதில் நீதிவான் ஒத்தி வைத்தார்.

### மருத்துவ அறிக்கை

துப்பாக்கிச் சூட்டுக்காயத்தினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினாலும், அதிர்ச்சியினாலும் அவருக்கு ஏற்பட்ட சுவாசத் தடையினாலும் அவர் இறந்துள்ளார் என்று பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ராம் மனோகர் மருத்துவ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ஐ-5-15-51-139)

## செயலகத்துக்கு ஒலிபெருக்கி சாதனம்

நவாலி, மே 19

யாழ். செயலகத்தின் பாவனைக்கென புதிய ஒலி பெருக்கிச் சாதனங்களை வடக்குக் கிழக்கு மாகாண தேசிய அபிவிருத்தி பயிலுநர் சபை அண்மையில் திட்டப் பணிப்பாளரிடம் கையளித்துள்ளது.

(ஐ-100)

## மிளகாய் கொள்வனவு

யாழ். மாவட்டத்தில் உள்ள அனேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செத்தல் மிளகாயை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவுசெய்து வருகின்றமை யாழ். மாவட்டத்தில் மிளகாய் இம்முறை அமோக விளைச்சல் கண்டுள்ளது.

## திருமலை வெடிவிபத்தில் ஐந்து புலிகள் மரணம்!

வவுனியா, மே 19

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தில் ஐந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள்உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

தணிகைவாணன் அல்லது மாஸ்ரர் (கிருபைராசா புவனேந்திரன் -மட்டக்களப்பு), மருதநம்பி அல்லதுஜெகுணா (தம்பிராசா ரஞ்சிதன் - மட்டக்களப்பு), ஆவுடையான் அல்லது வினோத் (செல்வம் பிரதீபன் - திருமலை), சிற்றம்பலம் (இரத்தினசிங்கம் லோகநாதன் - திருமலை), இசைப்பிரியன் (பாலேந்திரன் வாசவன் - யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தனர்.

(ஐ-9)

## சென்னையில் சிறுகதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், மே. 19

எழுத்தாளர் சாந்தன் எழுதிய ''யாழ் இனிது'' என்ற கதைத் தொகுதி அண்மையில் சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சென்னையிலிருந்து செயற்படும் ஜோதி விநாயகம் நினைவு சிறுகதைப் பரிசுத் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றபோது அவ் விழாவில் வைத்தே சாந்தனின் இந்த நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எழுத்தாளர் அசோக மித்திரன் நூலை வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை இயக்குநர் பாலு மகேந்திரா பெற்றுக்கொண்டார்.

இவ் விழாவில் 1997 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகளின் தொகுதி ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இயக்குநர் பாலுமகேந்திரா, ஏ. ஏ. எச். கே. கோரி, எஸ். சங்கரநாராயணன், ஐ. சாந்தன் ஆகியோர் விழாவில் உரையாற்றினர்.

(ஐ-9)

## புத்தளத்தில் தீ விபத்து

கொழும்பு, மே 19

புத்தளம் அகதிகளுக்கான வீடமைப்புத் திட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் நான்கு வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராகின.

திடீரென ஏற்பட்ட இத் தீவிபத்தினால் வீடுகளில் இருந்த அனைத்துப்பொருள்களும் அழிந்துள்ளன.

175 பேரைக் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தீ விபத்தினால் 13 வீடுகள் முற்றாக அழிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-9)

## விமானப்படை அதிகாரி சென்ற வாகனம் விபத்து

### பள்ளிச் சிறுவர்கள் காயம்

கொழும்பு, மே 19

குருநாகல் தம்புல்ல வீதியில் நேற்று இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துச் சம்பவங்களில் சிக்கி பாடசாலை மாணவர்கள், இரு படையினர் உட்பட 14 பேர் காயமடைந்துள்ளனர்.

கோகுல்ல பொலீஸ் பகுதியைச் சேர்ந்த ஓமரகொல்ல என்ற இடத்துக்குச் சமீபமாக விமானப்படை அதிகாரி ஓட்டிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதால் ஒன்பது பாடசாலைச் சிறுவர்கள் காயமடைந்தனர்.

மற்றைய சம்பவத்தில் முத்தட்டுக்கலவில் இராணுவ டிரக்ரர் ஒன்றும், சாரதி பயிற்சி பெற என ஓட்டிச் செல்லப்பட்ட பஸ் ஒன்றும் மோதியதில் இரு இராணுவத்தினரும் வேறு மூன்று பேரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 14 பேரும் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-9)

## மீன் விலை வீழ்ச்சி

அரியாலை, மே 19

குருநகர், பாஷையூர், கொட்டடி மீன் சந்தைகளில் கடந்த சில நாள்களாக மீன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

சந்தைகளில் விளைமீனும் பாரை மீனுமே அதிக அளவில் காணப்படுகின்றன.

(இ-17)

## தப்பியோடிய படையினரைப் பிடிக்க வீடு வீடாகவும் தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, மே 19

இராணுவத்தில் இருந்து தப்பியோடி விதிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் சரணடையாதவர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கையாக அம்பாறை, பொலனறுவை மாவட்டங்களின் சில பகுதிகளில் வீடு வீடாகத் தேடுதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட சில பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு வீடுகள் சோதனையிடப்படுகின்றன.

பொலனறுவை மாவட்டத்தில் 78 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ)

## ஸ்ரீ. ல. சு. கட்சியின் யாழ். கிளை இரங்கல்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். மாநகர மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் மறைவு குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையின் பொதுச் செயலாளர் எஸ். ஏ. ஒஸ்வால்ட் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாநகர மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் மரணச் செய்தி கேட்டு மிக்க மனவேதனை அடைந்தோம். அவர் 1998-1-29அன்று நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பிரதம வேட்பாளராகப் போட்டியிட்டு நகராதிபதியாக கடமைப் பொறுப்பேற்று பொது மக்களுக்குத் தனது குறுகிய கால சேவையை பிரமிக்கத் தக்க அணுகு முறையில் ஆற்றி எண்ணிலடங்காத பெருமையையும், பெயரையும் பெற்றுள்ளார்.

போர்க்காலச் சூழ் நிலையின் காரணத்தால் சிதைந்து சின்னாபின்னமாகி உள்ள யாழ். நகரை மீளப் புனரமைத்து கட்டியெழுப்ப முழுமூச்சுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் வேளையில் மங்கையர்க்கரசியும், தியாகசீலியுமாக விளங்கிய திருமதி யோகேஸ்வரன் எம்மை விட்டுப் பிரிந்தமை சொல்லிலடங்கா அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அவரின் திடீர் மரணம் யாழ். நகர மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் சகல இன மக்களுக்குமே பேரிழப்பை ஏற்படுத்தி உள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம். — என்று உள்ளது.

(ஐ)

## உள்ளூராட்சி ஒய் வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மே 19

உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் மே மாதத்துக்குரிய வவுச்சர்கள் தமது வங்கிக்கும் கிடைத்துள்ளதாகவும் —

ஒய்வூதியர்கள் வங்கியில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் — வர்த்தக வங்கியின் யாழ். முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 19

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஒழுங்கு செய்துள்ள ''தமிழகத்தில் அண்மைக் காலத் திறனாய்வு அணுகுமுறைகள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற உள்ளது. அதில் [illegible] மணியன் கருத்துரை வழங்குவார்.

(ஐ-9)

## நிதி ஒதுக்கீடு

வடக்கு—கிழக்கு மாகாண நிதி அமைச்சு இங்குள்ள குளங்கள், வீதிகளைப் புனரமைப்பதற்கென பிரமாண அடிப்படையில் ரூபா 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ-111)

## படுக்கையில் பாம்பு தீண்டி 2 சிறுமிகள் மரணம்

வவுனியா, மே 19

நித்திரையில் இருந்த சமயம் பாம்பு தீண்டியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

வீட்டில் நித்திரையில் இருந்த சமயம் அமரசிறி நாகராணி (வயது 5) என்ற சிறுமி சத்தம் போட்டுக் கத் [illegible] அடுத்து நித்திரையில் இருந்த பெற்றோர் எழுந்து பார்த்தபோது அந்தச் சிறுமி வாயால் நுரை தள்ளி மயக்கமடைந்தார். அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது அவர் மரணமானார். அவரது சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்துவிட்டு பெற்றோர் வீட்டிற்கு வந்தபோது மற்ற மகளான அமரசிறி சர்மிளாதேவி (வயது 2) என்ற சிறுமி வாயில் நுரை தள்ளிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

பாம்பு தீண்டியதால் இந்த மரணங்கள் சம்பவித்ததாக மருத்துவப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைகளை…

(முதலாம் பக்கத் தொடர்)

ஒட்டி நேற்று யாழ். நகரப் பகுதியில் வாழைகள், வெள்ளை, கறுப்புக் கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்தன.

நேற்று நல்லூரில் மேயரின் இல்லத்திற்கு மக்கள் சென்று அவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

(உ-3-9-15-139-51)

## கூட்டணிக் குழு…

(முதலாம் பக்கத் தொடர்)

கிரியைகளை நடத்துவதற்கு விரும்பியதை அடுத்து, அவ்வாறே முடிவு செய்யப்பட்டதாகவும்—

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். மேயர்…

(முதலாம் பக்கத் தொடர்)

பூதவுடல் இன்று காலை 7-30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக நல்லூர் இந்து வீதியில் உள்ள யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் —

மாநகர பிரதி முதல்வர் க. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் இரங்கலுரைகள் இடம் பெறவுள்ளன என்றும் —

யாழ். மாநகர ஆணையாளர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இன்று நண்பகல் அளவில் பூதவுடல் படையினரால் பொறுப்பேற்கப்பட்டு விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் சுமார் இரு மணி நேரம் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

அதன் பின்னர் சரோஜினி தேவி யோகேஸ்ரனியின் பூதவுடல் அவரின் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

நாளை கனத்தையில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3-51-15)


எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

கார்த்திக், மீனா நடித்த

அரிச்சந்திரா

(CD பிரதிகள் மாலையில் பெற்றுக்கொள்ளலாம்)

ஏனைய (பிரமிட்) வீடியோ CD கள்

ரத்தினா

அவள்வருவாளா

மெல்லத்திறந்தது கதவு

கர்ணா

மாப்பிள்ளை

கவலைப்படாதே சகோதரா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/3773)


# ஹெலி தாக்குதல் பிரிவுக்கு என வாங்கிய சுடுகலன்கள் பழையவை

## 2 மாதங்களின் பின்பே விடயம் அம்பலம்

கொழும்பு, மே 19

ஹிங்குராங்கொடவில் உள்ள விமானப்படையின் ஹெலிக்கொப்டர் தாக்குதல் பிரிவுக்கென வெளி நாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 23 மி.மீ. ரக சுடுகலன்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'எம், ஐ – 24' ரக ஹெலிக்கொப்ரர்களில் பொருத்துவதற்காக வெளிநாடு ஒன்றில் ஓடர் கொடுக்கப்பட்டு 12 சுடுகலன்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

பணம் செலுத்தி சுடுகலன்களைப் பெற்றுக் கொண்ட பின்னர்— இரண்டு மாதங்கள்— கழித்து விமானப் படை பொறியியல் பிரிவின் பிரதம பணிப்பாளர் ஏயார் கொமடோர் ஜீ. வை. டி. சில்வா அந்த சுடுகலன்களைப் பரிசோதித்தபோது அவற்றில் ஒன்றைத் தவிர ஏனையவை ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பழைய சுடுகலன்கள் என்பது தெரிய வந்துள்ளது. அத்துடன் அந்த ஹெலிக்கொப்டர் சுடுகலன்களில் பல உதிரிப்பாகங்கள் இணைக்கப்பட்டிருக்காததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இவற்றைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த சுடுகலன கொள்வனவு குறித்து விமானப் படையினர் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாயங்களை மீளாய்வு செய்வதற்கு உறுதி அளித்திருந்தனர்.

ஆனால் இப்போது யாழ்ப்பாண மேயர் சரோஜினிதேவி யோகேஸ்வரனை புலிகள் படுகொலை செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் ஒருபோதும் தங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில்லை. அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

சரோஜினிதேவி யோகேஸ்வரனின் கொலை இறுதியானதாக இருக்கப்போவதில்லை. புலிகள் தமது அரசியல் விரோதிகளை தொடர்ந்து இதே வழியில் பழிவாங்குவார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசியல் நடவடிக்கைகளை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கத்துடன் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

'சங்கிலியன் படை' என்ற பெயரில் புலிகளே இப் படுகொலையைப் புரிந்தனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன். அந்த மன்னனின் நற் பெயருக்கும் கீர்த்திக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் தமது கொடூரச் செயலுக்கு அந்த மன்னனின் பெயரைப் புலிகள் பயன்படுத்துவது யாழ். மக்களால் கண்டிக்கப்படும்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-6)


இன்றைய வீடியோ CD வெளியீடு

கார்த்திக், மீனா நடித்த

() அரிச்சந்திரா

(Pyramid CD)

சுப்ப ஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/3774)


## புலிகள் ஷெல் வீச்சு!

மட்டக்களப்பு நாசிவன் தீவுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் இரவு மோட்டார் ஷெல் தாக்குதலை நடத்தினர். இதனால் படைச் சிப்பாய் உட்பட இருவர் காயமடைந்தனர். அவர்கள் பின்னர் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-21)

## தையல் பயிற்சி

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஒன்று ஜூன் முதலாம் திகதி தொடக்கம் செம்பியன்பற்றில் ஆரம்பமாக உள்ளது.

# உயிரியலோடு இணைந்த கணிதம் உயர்தரப் பரீட்சையில் அறிமுகம்

கொழும்பு, மே 19

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்தவருடம் ஒகஸ்ட் மாதத்திலிருந்து உயிரியலோடு இணைந்த கணிதமும், உயர் கணிதமும் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

இதற்கான பாடவிதானங்களையும் ஆசிரியர் வழிகாட்டி நூல்களையும் தேசிய கல்வி நிறுவகம் தயாரித்துள்ளது. உயிரியல் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன. வடபகுதி ஆசிரியர்களுக்கு இதுவரை இப்பயிற்சியளிக்கப்படவில்லை.

இவர்களுக்கானபயிற்சிநடவடிக்கைகள்இம்மாதம்29ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது (ஐ-9)

# இந்தோனேசியாவில் தங்கி உள்ள இலங்கையர்களுக்கு ஆபத்தில்லை

## தூதரக அதிகாரி தகவல்

லண்டன், மே 19

இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக அங்கு தங்கியுள்ள வெளிநாட்டவர்களைத் திருப்பி அழைப்பதில் பல நாடுகளும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு தங்கியுள்ள சுமார் ஆயிரம் இலங்கையர்களைத் திருப்பி அழைப்பதற்கு இதுவரை எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்று லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் இலங்கைச் சமூகத்தினரை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என அவர் கூறினார்.

ஆனால் இந்தியா தனது 8 ஆயிரம் பிரஜைகளை உடனடியாக இந்தியாவுக்கு அழைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வெளியேறிக் கொண்டிருக்கும் இந்தியர்களுக்காக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட விமானம் ஒரு தொகுதி இந்தியர்களை ஏற்றிக் கொண்டு நேற்று டில்லி புறப்பட்டது. (ஐ-9)

# அமெரிக்கத் தளபதியின் கொழும்பு விஜயம் ரத்து!

கொழும்பு, மே 19

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பீடத் தளபதி ஜெனரல் வில்லியம் ஸ்ரீல் இவ்வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவிருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் அவரது விஜயம் ஒத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

## சென்ற ஆண்டு ஆரம்பித்து முடிவடையாத

# ஆஸ்பத்திரி திருத்த வேலைக்கான நிதி ஒதுக்கீடு இம்முறையும் போதாது!

திருநெல்வேலி, மே 18

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடந்தஆண்டில் நிறுவ ஆரம்பிக்கப்பட்டு இதுவரை பூர்த்தி செய்யப்படாமலிருக்கும் வார்ட்டுகளுக்கும், ஏனைய கட்டடங்களுக்கும் தொடர் வேலைகளை மேற்கொள்வதற்காக இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் நிதி மிகவும் குறைவானதாக இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம் வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி 25 வீதமான கட்டட வேலைகளைச் செய்யக் கூட போதுமானதாக இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட சங்கானை அரசினர் வைத்தியசாலையின் புதிய 24 படுக்கைகளை கொண்ட வார்ட்டின் கட்டட தொடர் வேலைகளுக்கு இவ்வருடம் எட்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட புதிய வார்ட்டுக்கான தொடர் வேலைக்கு ஆறு இலட்சத்து 8 ஆயிரம் ரூபாவும்—

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தொடர் கட்டட வேலைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும்—

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை புனரமைப்பு வேலைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும் —

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை நிர்வாகக் கட்டிடத் தொடர் வேலைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும்—

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

பளை அரசினர் வைத்தியசாலையில் புதிய பற்சிகிச்சை நிலையம் நிறுவுவதற்காக 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-135)

## மதுபான நிலையம் அமைக்க எதிர்ப்பு

நாவற்குளிச் சந்தியில் தனியார் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப் படுவதற்கு நாவற்குளி, தச்சன் தோப்பு, மறவன் புலோ, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் உள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி மக்களின் பிரதான போக்குவரத்துப் பகுதியான இச் சந்தியில் பொது மக்கள், மாணவர்கள் உட்பட பலர் போக்குவரத்திற்கு [illegible] இங்கு மதுபான நிலையம் அமைப்பதால் பல அசௌகரியங்கள் ஏற்படலாமெனவும், இதனால் சந்தியில் மதுபான நிலையம் அமைப்பதைத் தடைசெய்யுமாறும் பிரதேச செயலருக்கு இப்பகுதி மக்கள் மகஜர் அனுப்பியுள்ளனர். (ஐ-117)

## அறிவித்தல்

தற்சமயம் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கிக்கொண்டிருக்கும் எம். வி. ஓசன் கரியர் கப்பலில் யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலை, வெங்காயம், ஒடியல் மற்றும் வெற்றுப் போத்தல்கள் போன்ற பொருள்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல விரும்பும் வியாபாரிகள் கீழ்க் கண்ட முகவரியில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

திரு. சி. சந்திரகாந்தன்
முதலாம் கட்டை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org